**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.02.2022–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **25.02.2022** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணியில் சாக்கடைகளில் வளரும் கொசுப்புழுக்களை அழிக்க Basilicas thuringiensis (Bacticide) மருந்து கை தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டியுள்ளது. மேற்படி மருந்து தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் சென்னை அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட Biotech International Limited நிறுவனத்தில் வாங்குவதற்கும், உத்தேச செலவினம் ரூபாய் மூன்று லட்சத்திற்கும், தனி அலுவலரின் அனுமதிக்கும் கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், சென்னை அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட Biotech International Limited நிறுவனத்தில் வாங்கிக்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) உத்தேச செலவினம் ரூபாய் மூன்று லட்சம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(எச்1/4247/21)

**தீர்மானம் எண். 1233**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் 2007–08–ஆம் நிதியாண்டிலிருந்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட வருமான வரி கணக்குகளிலுள்ள குறைபாடுகளை களைய வருமான வரி ஆணையரகத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சேலம் E.Filling Net Centre மூலம் ஒவ்வொரு காலாண்டிற்கும் PAN திருத்தம் உள்ளிட்ட பணிகளை மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :** வருமான வரி கணக்குகள் சரிசெய்து தாக்கல் செய்ய ஆகும் செலவினம் ரூ. 25000/– மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(4099/21/இ1)

**தீர்மானம் எண். 1234**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21–இல் தினசரி அங்காடி (Daily Market) மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ. 243.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு பணிகள் இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க. எண். 19089/2021/பி2, நாள் 29.12.2021–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, பணி மேற்கொள்ள 16.02.2022 அன்று பெறப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததால் 24.02.2022 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | அசோக் கன்ஸ்ட்ரக்சன்,<br>10/243, துறையூர் மெயின் ரோடு,<br>பொன்னேரி அஞ்சல், நாமக்கல். | ரூ. 243.00 இலட்சம் | – | 4.95 % |
| 2 | திரு வி. ஜீவானந்த், ஒப்பந்ததாரர்,<br>6/853, EB காலனி, பரமத்தி ரோடு, நாமக்கல் | | – | 5.85 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1–இல் உள்ள அசோக் கன்ஸ்ட்ரக்சன், வ.எண்.2–இல் உள்ள திரு வி. ஜீவானந்த், ஒப்பந்ததாரரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் அசோக் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி குறைத்துதர கடிதம் மூலம் கோரப்பட்டது. கட்டுமானப் பொருட்கள் மற்றும் டீசல் விலையேற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளுக்கும் 4.95 % கூடுதலான விலை விகிதத்தில் இப்பணிகளை செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து அசோக் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் 28.02.2022 அன்று கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும், பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி வ.எண்.1-இல் உள்ள ஒப்பந்ததாரரான அசோக் கன்ஸ்ட்ரக்சன், மதிப்பீட்டை விட 4.95 % கூடுதலான விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி அசோக் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.95 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3707/21/இ1)

**தீர்மானம் எண். 1235**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் 15–ஆவது நிதிக்குழு 2021–22–ஆம் ஆண்டின்கீழ் வ.ஊ.சி. நகர் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் 25 எச்.பி. மின்மோட்டார் பொருத்தப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மின்மோட்டார் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டி உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்கள் 2022 நடைமுறை விதிகள் அமலில் உள்ளதால் பொது மக்களின் குடிநீர் தேவையினை கருத்திற்கொண்டு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–இன்கீழ் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

நாமக்கல் அரசிதழ் விலை விகிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நாள் ஒன்றுக்கு ரூ. 585/– வீதம் இரு பணியாளர்களுக்கு தேர்தல் நடைமுறை முடிவிற்கு வரும் வரையான 45 தினங்களுக்கு ஒப்படைப்பு அடிப்படையில் திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர் அவர்கள் வசம் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
இ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1236**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள RO System பழுதடைந்துள்ளதால் தினசரி குடிநீர் தேவைக்காக பழுதுபார்க்க வேண்டி பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 1) ஸ்ரீ கோகுலகண்ணன், RO System &UPS Battery, டி.வி.எஸ். ரோடு, இராசிபுரம் | ரூ. 13500/– |
| 2) ஸ்ரீ வெங்கடேஷ் அக்வா RO System, டி.வி.எஸ். ரோடு, இராசிபுரம் | ரூ. 14500/– |
| 3) ஸ்ரீ அக்வா டெக் RO System, காந்தி சாலை, இராசிபுரம் | ரூ. 16000/– |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ கோகுலகண்ணன், RO System &UPS Battery, இராசிபுரம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(846/22/இ2)

**தீர்மானம் எண். 1237**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(6)** இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் நிதியின்கீழ் வார்டு எண்.2, போலீஸ் லைன் தெருவில் பொதுக்கழிப்பிட ஆழ்துளைக் கிணறு பிளசிங் செய்து மோட்டார் பழுது சரிசெய்தல் பணி மேற்கொள்ள 09.02.2022 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.05% குறைவு.
2) திரு ஆர். பிரகாசம், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட 1.67% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4421/21/இ2)

**தீர்மானம் எண். 1238**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(7)** இராசிபுரம் நகராட்சி திறந்தவெளி மலம் கழித்தல் (ODF+) நகராட்சி என சான்று பெறுவதற்காக 05.01.2022–இல் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை கேட்கப்பட்டது. ஆட்சேபனை எதுவும் பொது மக்களிடமிருந்து பெறப்படாததால் இராசிபுரம் நகராட்சி ODF+ சான்று பெறுவதற்காக விண்ணப்பிக்கவும், ODF+ நகராட்சி என பிரகடனப்படுத்தவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (1816/20/எச்1)

**தீர்மானம் எண். 1239**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(8)** இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இராசிபுரம் நகராட்சி திறந்த வெளி மலம் கழித்தல் (ODF+) இல்லாத நகராட்சியாக அறிவிக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான ODF+ சான்று பெறுவதற்கு விண்ணப்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இராசிபுரம் நகராட்சி ODF+ சான்று பெறுவதற்காக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் பெறுவதற்காக நாளிதழில் விளம்பரம் செய்யவும், ODF+ என அறிவிக்க விண்ணப்பிக்கவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50000/–க்கும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி பொதுநிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(1816/20/எச்1)

**தீர்மானம் எண். 1240**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தீவிர டெங்கு, மலேரியா நோய் கட்டுப்படுத்தும் வகையில் வீடுவீடாக சென்று ஆய்வு மேற்கொண்டு, கொசுப்புழுக்களை கண்டறிந்து அபேட் மருந்து ஊற்றி அழிக்கவும், சுற்றுப்புறங்களிலுள்ள பிளாஸ்டிக், கப் போன்ற பொருட்கள் தண்ணீர் தேங்காமல் உள்ளதை ஆய்வு செய்து அகற்றவும் 30 Domestic Breeding Checker – 30 பணியாளர்கள் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அரசிதழ் அறிவிக்கையில் தெரிவித்துள்ள ஊதியத்தின் (நாள் ஒன்றுக்கு ரூ. 415) அடிப்படையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று 1.4.2022 முதல் 30.6.2022 வரை மூன்று மாதங்களுக்கு

உத்தேச செலவினம் ரூ. 10 லட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விலைப்புள்ளிகள் பெற்று 30 Domestic Breeding Checker பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும், உத்தேச செலவினம் ரூ. 10 லட்சம் பொது நிதி (அல்லது) திடக்கழிவு மேலாண்மை நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 1241**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–இன்கீழ் தினசரி அங்காடி மேம்பாடு (Daily Market) மேம்பாடு செய்யும் ரூ. 243.00 இலட்சம் மதிப்பீட்டு திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்ட விவரம் வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | மாலை மலர் | – | ரூ. | 16150.00 |
| 2) | Financial Express | – | ரூ. | 2550.00 |
| | | | ரூ. | 18700.00 |
| | மாநில சரக்கு மற்றும் சேவைவரி | – | ரூ. | 467.50 |
| | மத்திய சரக்கு மற்றும் சேவைவரி | – | ரூ. | 467.50 |
| | | | ரூ. | 19635.00 |

ரூ. 19635/– Flame Advertising Company (P) Ltd., சென்னை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3472/22/இ1)

**தீர்மானம் எண். 1242**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–இன்கீழ் வார்டு எண். 8, வீட்டு வசதி வாரியத்தில் ரூ. 48.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்க்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினகரன் நாளேட்டில் வெளியிடப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 2940/– KAL Publication Private Limited, நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3707/21/இ1)

**தீர்மானம் எண். 1243**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் குப்பை இல்லாத நகரங்களுக்கான நட்சத்திர அங்கீகாரம் பெற விண்ணப்பிக்க வேண்டியுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி இராசிபுரம் நகராட்சியிலுள்ள பகுதிகளில் குப்பைத் தொட்டிகள் முழுவதுமாக அகற்றப்பட்டு, வீடுகளில் நேரடியாக 100 சதவீதம் குப்பைகள் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. இராசிபுரம் நகராட்சியை குப்பை இல்லாத நகரமாக மூன்று நட்சத்திரங்கள் (GFC – 3 star) பெற சுய உறுதிமொழி சான்றிதழ் பெறவும், பொது மக்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்கள் பெறவும் நாளிதழில் விளம்பரம் செய்யவும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) இராசிபுரம் நகராட்சி குப்பை இல்லாத நகரமாக மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற, பொது மக்களின் ஆட்சேபணைகள் பெற, நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2) செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

(1503/17/எச்1)

**தீர்மானம் எண். 1244**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் வழங்கப்படும் குப்பை இல்லாத நகரங்களுக்கான நட்சத்திர அங்கீகாரம் பெற விண்ணப்பிக்க வேண்டியுள்ளது. இராசிபுரம் நகராட்சி குப்பைத் இல்லாத நகரமாக மூன்று நட்சத்திர (GFC – 3 star) அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி சான்றிதழ் பெற பொது மக்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்கள் வழங்க நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, ஆட்சேபணைகள் எதுவும் பெறப்படாததால் குப்பை இல்லாத நகரமாக மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற விண்ணப்பிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(1503/17/எச்1)

**தீர்மானம் எண். 1245**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நகர்ப்புற வீட்டு வசதி துறையால் வழங்கப்படும் குப்பை இல்லா நகரங்களுக்கான நட்சத்திர அங்கீகாரம் பெற விண்ணப்பிக்க வேண்டியுள்ளது. இராசிபுரம் நகராட்சி குப்பைத் இல்லாத நகரமாக மூன்று நட்சத்திர (GFC – 3 star) பெறுவதற்கு விண்ணப்பிக்க பொது மக்களிடம் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துருக்கள் பெறுவதற்கு தி ஹிந்து தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ரூ. 6240/– வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) செலவினம் ரூ. 6240/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(1503/17/எச்1)

**தீர்மானம் எண். 1246**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–இன்கீழ் ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20557/2020/இ3, நாள் 15.12.2020–இல் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| இராசிபுரம் நகராட்சி | 600.00 | 510.00 | 90.00 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20557/2021/இ1 நாள் 30.11.2021–இல் 1.743 கி.மீ. நீளமுள்ள ரூ. 1.22 கோடி மதிப்பீட்டிலான 9 சாலைப் பணிகள் நீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. ரூ. 1.22 கோடி மதிப்பீட்டிலான 9 சாலைப் பணிகள் நீக்கம் செய்த பிறகு தற்போதைய மதிப்பீட்டுத் தொகை ரூ. 478.00 இலட்சம் ஆகும்.

**<u>நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட சாலைப்பணிகள் விவரம் :</u>**

| வ எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் சாலை முதல் காட்டூர், காளியம்மன் கோவில் தெரு, விநாயகம் தெரு, செட்டியண்ணன் தெரு, வி. நகர் சாலை 6 & 7 ஆகியப் பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் பழனி தெருவில் கான்கிரீட் | 2.410 | 4.00 முதல் 7.00 | 167.38 |

| | | | | |
|---|---|---|---|---|
| | சாலை அமைத்தல். | | | |
| 2 | கோனேரிபட்டி எக்ஸ்டன்சன் 2, காமராஜ் காலனி, காந்தி நகர் தென்வடல் சாலை, கோனேரிபட்டி ராம்நகர் தென்வடல் சாலை, இராமதீர்த்தம் சந்து, பிற்பட்டோர் காலனி சாலை, இந்திரா காலனி, வி. நகர் சாலை எண். 4 ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை அமைத்தல் | 2.332 | 4.00 முதல் 7.00 | 158.33 |
| 3 | மேற்கு காலனி, வள்ளலார் கோவில் தெரு, எல்லப்பா தெரு 3, வரதராஜுலு தெரு, திரு.வி.க தெரு, நெசவாளர் காலனி சாலைகள், மாரப்பன் தோட்டம், E.B. சாலை, காதர் தெரு ஆகியப் பகுதிகளுக்கு தார்சாலை அமைத்தல். | 2.207 | 4.00 முதல் 7.00 | 152.29 |
| | **மொத்தம்** | **6.949** | | **478.00** |

எனவே, இராசிபுரம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 (SRP)–இன்கீழ் ரூ. 478.00 இலட்சம் மதிப்பீட்டிலான சாலைப் பணிகளில் முடிக்கப்பட்ட சாலைப் பணிகளுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ. 144.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதால் மீதமுள்ள ரூ. 333.64 இலட்சத்திற்கு 7.95% என்ற ஆண்டு வட்டி விகிதத்தில் TUFIDCO, சென்னை நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் செப்டம்பர் 2022 முதல் ஜுன் 2032 வரை 10 வருட காலத்தில் கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ஆகியவற்றை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திரும்ப செலுத்தவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. TUFIDCO, சென்னை நிதி நிறுவனத்திடமிருந்து சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 ( SRP)-இன் கீழ் ரூ. 333.64 இலட்சத்தை 7.95% என்ற ஆண்டு வட்டி விகிதத்தில் கடன் பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் செப்டம்பர் 2022 முதல் ஜுன் 2032 வரை 10 வருட காலத்தில் கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ஆகியவற்றை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திரும்ப செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/19/இ1)

**தீர்மானம் எண். 1247**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள Lodge and Complex கட்டப்பட்டு 50 வருடங்கள் முடிந்த நிலையில் தற்போது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதில் பல வகையான சட்ட விரோதமாக பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இடிந்துவிழும் ஆபத்தான நிலையில் இருப்பதால் மேற்க்கண்ட கட்டடத்தை RE சேலம் அவர்களிடம் அனுமதி பெற்று இடிக்க ஒப்புதலுக்கு மன்றத்தின் அங்கீகாரம் து.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3472/21/இ1)

**தீர்மானம் எண். 1248**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 2021–2022–ஆம் ஆண்டிற்கான பொது நிதிக் கணக்குகள், குடிநீர் நிதி கணக்குகள் மற்றும் கல்வி நிதி கணக்குகளை இணையத்தில் பதிவேற்றம் செய்து முடித்துக் கொடுக்கும் பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 60000/–த்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்க்கலாம்.

(1765/21/பி1)

**தீர்மானம் எண். 1249**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இராசிபுரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 2021–22–ஆம் ஆண்டு கணக்குகளை இணையத்தின் மூலம் முடித்துக் கொடுக்கும் பணிக்கு 09.02.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1) | பி. சுபத்ரா, த/பெ. பாலசுப்ரமணியம், தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | ரூ. 70,000/– |
| 2) | ஜி. பிரியதர்ஷினி, த/பெ. எம். கணேசன், தோக்கவாடி | ரூ. 65,000/– |
| 3) | எ.வி. ஸ்ரீதர், த/பெ. எ. வைரவேல், இ189, கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு – 637 214 | ரூ. 60,000/– |

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் வ.எண். 3–இல் கண்டுள்ள திரு எ.வி. ஸ்ரீதர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எ.வி. ஸ்ரீதர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(1765/21/பி1)

**தீர்மானம் எண். 1250**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ர. அசோக்குமார்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.